சிறுவர்

# அமுதம்

19.05.1997


கிண்ணம்: 8

எண்ணம்: 5



சிறுவர் இலக்கிய மாத சஞ்சிகை.

**KINDER LITERARISCHES MAGAZIN.**



# பசு
## (ஒரு உரையாடல்)

மகன்: அப்பா, இன்று பாடசாலையில் உணவு சம்பந்தமான பாடம் படிக்கும் பொழுது எனது ஆசிரியை இந்து சமயத்தவராகிய நீங்கள் ஏன் மாட்டிறைச்சி சாப்பிடுவதில்லை என்று கேட்டார். எனக்கு விளக்கம் சொல்லத் தெரியவில்லை. அது பற்றிச் சிறிது விளக்குவீர்களா? அப்பா.

அப்பா: நிட்சயமாக, அர்த்தமுள்ள கேள்வியாகத்தான் உனது ஆசிரியை கேட்டிருக்கிறார். இது உனக்கு மட்டுமல்ல, இந்து சமயத்தைத் தழுவிய அனேகருக்கும் தெரிந்தும் தெரியாத நிலை. வெளி நாடுகளில் பிறந்து, வளர்ந்து வருகின்ற குழந்தைகளுக்கும், பெற்றோர் விளக்குவதில்லை.

மகன்: ஏன் மாட்டிறைச்சி சாப்பிடக் கூடாது? அது சாப்பிடுவதால் யாருக்குத் தீங்கு?

அப்பா: பசுவைக் கொன்று சாப்பிடுவதால் நமக்குத்தான் தீங்கு விளைகின்றது?

மகன்: அது எப்படி?

அப்பா: மகனே! பசு ஒரு சாதுவான மிருகம். வீட்டு மிருகம். புல்லையும், வைக்கோலையும், இலைகுழைகளையும் சாப்பிட்டு, தனது இரத்தத்தைப் பாலாக்கி எங்களுக்குத் தருகிறது.

மகன்: ஏன்? ஆடு, மாடு, ஒட்டகங்கள் கூட பாலைத் தருகின்றனவே!


அப்பா: அவைகளின் பாலை விடப் பசுவின் பால் ஒரு தாயினுடைய பாலுக்கு நிகரானது. ஒரு குழந்தை பிறந்து, அந்தக் குழந்தைக்கு ஊட்டக் கூடிய பால், அந்தத் தாயிடம் இல்லாதபோது, அதற்கு நிகரான பாலாக பசுவின் பால்தான் ஊட்டப் படுகின்றது. தாய்ப்பாலைப் போல் நோய்களை எதிர்க்கக் கூடிய ஊட்டச்சத்து, விட்டமின்கள் நிறைந்தது பசுவின் பால்தான்.

மகன்: அது சரி. பால் தருவதற்கும், அதன் இறைச்சியைச் சாப்பிடக் கூடாது என்பதற்கும் என்ன சம்பந்தம்?

அப்பா: சம்பந்தம் இருக்கிறது. ஒரு குழந்தை பிறந்த உடனே அதனுடைய முதல் வார்த்தை அம்மா என்ற சொல். அப்பா என்று சொல்லி எந்தக் குழந்தையும் அழுவதில்லை. அதுபோல

மிருகங்களிலே பசு மட்டும்தான் (அ)ம்மா என்று கத்துகிறது. லண்டனில் இருக்கும் பசு ஆங்கிலத்திலோ, ஜேர்மனியில் இருக்கும் பசு டொச்சிலோ கத்துவதில்லை. அதுவும் அம்மா என்று தானே கத்துகின்றது. குழந்தைக்குப் பால் தருகின்றது. அம்மா என்று அன்புடன் அழைக்கிறது.

அப்படியான ஒரு பிராணியை நாம் கொன்று தின்னலாமா? அதைக் கொன்று தின்பது, பெற்ற தாயைக் கொன்று தின்பதற்கு ஒப்பாகும். நம் தாயை நாம் கொல்வோமா? தாயைக் கொன்ற பழி ஏழேழு ஜென்மங்களுக்கும் தொடரும். பெற்ற தாயை அம்மா, அன்னை, தாய், மாதா, என்றெல்லாம் அழைக்கிறோம். அதேபோல் பசுவையும் கோமாதா என்றழைக்கிறோம். அதுவும் ஒரு தாயல்லவா!



மகன்: நீங்கள் சொல்வது உண்மைதான்.

அப்பா: அது மட்டுமல்ல, இந்து சமயத்திலே பசு ஒரு புனிதமான மிருகமாக ஏற்றுக் கொள்ளப் பட்டிருக்கிறது. இறைவனின்

அபிஷேகப் பொருளான பஞ்சகௌவியம் என்று குறிக்கப் படுகின்ற பசுவின்பால், தயிர், வெண்ணெய், கோசலம், கோமயம் ஆகியவை பசுவிலிருந்தே கிடைக்கப் பெறுகின்றன. ஆக மனிதர்களுக்கு மட்டுமல்ல, தெய்வத்திற்கும் பசு பிரயோசனங்களைத் தருகிறது.



மகன்: உங்கள் விளக்கத்தில் இருந்து பல செய்திகளை அறிந்து கொண்டேன். அப்பா!

அப்பா: அது மட்டுமல்ல மகனே! சைவ சமயத்திலும், வைணவ சமயத்திலும் சரி, எருது, பசு, என்பவை முக்கிய இடத்தை வகிக்கின்றன. சிவபெருமானின் வாகனமான எருது, பூத கணங்களில் ~~ஒன்றாக~~ ஏற்றுக் கொள்ளப் பட்டிருக்கிறது என்பதைக் கோயில்களில் நீ கண்டிருக்கிறாய் அல்லவா?

மகன்: ஆமாம் அப்பா, கோயிலில் சுவாமிக்கு எதிர்ப் புறமாக நந்தி என்ற எருதின் உருவம் வைக்கப் பட்டிருப்பதைக் கண்டிருக்கிறேன்.

அப்பா: அது மட்டமல்ல! மகனே, பசுவைப் பற்றிப் பல புராணக் கதைகளும் உண்டு. அதில் ஒரு சின்னக் கதை கூறுகிறேன். கேள்.சிவபெருமானுக்கும், உமாதேவிக்கும் திருமணம் நடந்து விட்டாலும், உமாதேவிக்கு சிறிய ஆசை ஏற்பட்டது. உமாதேவியார் சிவபெருமானிடம், "மீண்டும் ஒரு முறை தங்களை மாப்பிளைக் கோலத்தில் காண வேண்டும். நான் தங்கள் கழுத்தில் இடும் மாலை தங்களின் பரந்த மார்பில் புரள்வதைக் காண வேண்டும் என்று ஆசையாக இருக்கின்றது" என்றாள். "அதற்குச் சில காலம் செல்லும். வரும் பிரம்ம கல்ப காலத்தில் நமது மறுதிருமணம் ஆகும்" என்றார் சிவபெருமான்.

அவ்வளவு கால தாமதத்தை உமாதேவியாரால் தாங்க முடியவில்லை. முழுமுதல் கடவுளாகிய சிவபெருமான் வேண்டுமென்றே தன்னை அவமதிக்கிறார் என்று எண்ணம் கொண்டு, சிவபெருமானை அலட்சியப் படுத்தினாள். அதனால் கோபம் கொண்ட இறைவன் பசு வடிவத்துடன் பூவுலகில் சுற்றித் திரியும்படி சாபம் கொடுத்தார். பசுவின் உருவம் கொண்டு உமாதேவியார் மிகுந்த வருத்தத்துடன் பூமியில் திரிந்தார். சிவபெருமானின் திருவுளப்படி திருமகள், கலைமகள், இந்திராணி முதலியோரும் பசுக்களாகி உமாதேவியாருடன் திரிந்தார்கள்.

பசு உருவில் இருந்தே உமாதேவியார் இறைவனைப் பிரார்த்தனை செய்து வந்தார். தன் சகோதரியான உமாதேவியார் காட்டிலும் மேட்டிலும் சுற்றித் திரிவது திருமாலுக்கு வேதனையாக இருந்தது. கோபால கிருஷ்ணனாகப் பிறந்தார். பசுக்களை மேய்த்தார். சிவபெருமானின் உள்ளத்தைக் குளிர வைக்க சிவலிங்க வடிவில் இருக்கும் சிவபெருமானுக்குத் தன் பாலைக் கொண்டு அபிஷேகம் செய்கிறார் உமாதேவியார். சிவபெருமான் மகிழ்ச்சியோடு உமாதேவியின் சாபத்தை நீக்குகிறார். என்பது புராணக் கதை.

இப்படியாக தெய்வங்களோடு சம்பந்தப் பட்டது பசு. ஆனபடியால் இந்து சமயத்தவர் மாட்டிறைச்சி உண்பது பாவமாகக் கருதப் படுகின்றது.

மகன்: மிகவும் நல்லது அப்பா. நீங்கள் கூறியவை எனக்கு மட்டுமல்ல, என் போன்ற சிறுவர், சிறுமியரும் தெரிந்திருக்க வேண்டியவை இல்லையா, அப்பா?

அப்பா: உண்மை தான் மகனே.

அனுப்பியவர்: முகுந்தன்மகேந்திரம்

அவர் யார்?



தட்டில் இருந்த சோளப்பொரியை
விட்டு எறிந்த தார்? -பின்
நட்ட நடுவே அந்த வெள்ளித்
தட்டை வைத்ததார்?

வட்டமாக நீலத் திரையில்
வெட்டி எடுத்த தார்? -சுற்றிப்
பொட்டுப் பொட்டாய் எங்கும் சரிகைப்
புள்ளி வைத்த தார்?

பட்டுத் துணியில் முத்தை எங்கும்
ஒட்டி வைத்த தார்? -அதன்
நட்ட நடுவே குண்டு விளக்கைக்
கட்டி விட்ட தார்?

பட்டப் பகலாய் ஒளியை வீசும்
வட்ட நிலவைப் பார் -உடன்
வெட்ட வெளிச்சமாய்த் தெரியும்,
இந்தப் பாடல் பார்.

-அழ.வள்ளியப்பா.

# வினாவிடைப் போட்டி

1."சிந்து சாஹர்" என்பது என்னும் கடலை உங்களுக்குத் தெரியுமா? தற்போது உள்ள பெயர் தெரியும். சினிமாப்பாடலொன்று கூட இருக்கிறதே!
அன்பு, மரபு, தும்பி, துக்கம், கலகம், படகு, பால்.

2. முதல் முதல் திறந்தவெளிப் பல்கலைக்கழகம் இங்கு தான் ஆரம்பிக்கப் பட்டது. நாடு தெரிந்தது தான்.
இரவல், பங்கு, கிண்ணம், பலா, சந்தம், பந்து.

3. புகையிலை உற்பத்தியில் முதல் இடத்தை வகிப்பது இந்த நாடுதான்.
சீதக்காதி, சேனாதிபதி.

4. வலது கண்ணைப் புற்றுநோயால் இழந்து விட்ட போதும், துப்பறியும் நிபுணராக இவர் நடித்த தொலைக்காட்சித் தொடர் மிகவும் பிரபல்யம் வாய்ந்தது. இவரைத் தெரிகிறதா, இவரின் தொடரை நீங்கள் அறிவீர்களா?
பீடு, புற்று, அலறல், உயிர், பாசம், கல், பக்கம். -- கொடுங்கோலன், சலங்கை, கம்பு, போதல்.

5. தேயிலை உற்பத்தியில் இப்பொழுதும் முதலிடத்தை வகிப்பது இந்த நாடு தான்.
இரவு, அலகு, பங்கு, உலக்கை
முடிவு திகதி: 07.08.97

# உண்மையின் உயர்வு



உமாவும் இராணியும் சிநேகிதிகள். ஒரு நாள் இருவரும் கடற்கரைக்கு உலாவப் போனார்கள். அங்கே இராணி தன் மோதிரத்தைத் தொலைத்து விட்டாள். தனது பெற்றோருக்கு என்ன சொல்வதென்று வகையறியாது திகைத்தாள். வீடு போய்ச் சேர்ந்ததும் ஒன்றும் பேசாது இருந்து விட்டாள்.

உமா தனது சிநேகிதிக்கு இப்படி நேர்ந்து விட்டதே என்று கவலையோடு இருந்தாள். அவளால் இது பற்றி யாரிடமும் சொல்லாமல் இருக்க முடியவில்லை. உடனே தனது பெற்றோரிடம் நடந்ததைக் கூறினாள்.

அவளது தந்தையார் கடற்கரைக்குச் சென்று தேடினார். மோதிரமும் கிடைத்து விட்டது. அதைக் கொண்டு வந்து உமாவிடம் கொடுத்து உரியவரிடம் சேர்த்து விடும்படி கூறினார். உமா அதைக் கொண்டு இராணியின் வீட்டுக்குப் போனாள்.

ராணியின் தாயார் உமாவின் செயலைப் பாராட்டினாள். விஷயத்தைச் சொல்லாததால் இராணி பயந்து நடுங்கினாள். அவளுக்கு நல்ல ஏச்சும் பேச்சும் கிடைத்தது. "உண்மையைப் பேசி உண்மையாக நடந்ததால் இந்த மோதிரத்தை நீயே வைத்துக் கொள்" என்று கூறி இராணியின் தாயார் உமாவின் கைவிரலில் மோதிரத்தை அணிந்து விட்டார். அது உண்மைக்குக் கிடைத்த பரிசு.

-கிரிசாந் மனோரஞ்சிதராஜா-

✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡

பெரிய விஷயங்களைப் போலவே சிறிய விஷயங்களையும் கவனிக்கக் கூடிய மனமே உண்மையும் உரமும் பொருந்திய மனமாகும்.

-ஜான்ஸன்-

✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡

# தேர்வு



தினகரன் பெரிய பணக்காரர். ஆனாலும் அவர் மிகவும் கவலையுடன் இருந்தார். அவருடைய மனைவி இறந்து விட்டதால், பிள்ளைகளை நல்ல முறையில் கவனித்துக் கொள்ளவும், வீட்டை நிர்வாகிக்கவும் ஆள் தேவைப்பட்டது. அதுவும் ஆண்களை விடவும் பெண்களையே அவர் விரும்பினார். பலர் வந்தார்கள், போனார்கள், யாரையுமே தினகரனுக்குப் பிடிக்கவில்லை. இதனால் நேர் முகத் தேர்வு வைத்துத் தேர்ந்தெடுக்க விரும்பினார்.

தேர்வுக்கும் பல பெண்கள் வந்திருந்தனர். அவர்களிடம் ஒவ்வொரு மூட்டை நெல் கொடுக்கப்பட்டது. மாலை கழிந்து இரவு வரும் முன் அவற்றை பதமான உணவாக்கித் தர வேண்டும். செய்யப் பட்ட இடமும் துப்பரவு செய்யப் பட்டிருக்க வேண்டும். ஒவ்வொருவருக்கும் கூடவே உரல், உலக்கை, சுளகு போன்றவை கொடுக்கப் பட்டிருந்தது. சிலர் எப்படிச் செய்வதென்ற யோசனையிலேயே இருந்தனர். சிலர் விரைவாகச் செய்ய எண்ணி நெல்லை உரலில் போட்டு இடித்தனர்.

ஆனால் ஏழைப் பெண்ணான மாலதியோ, மூட்டை நெல்லைப் பதப்படுத்தி சப்பை நெல்லை வேறாக்கினாள். மிகுதி நெல்லை நாலு பாகமாகப் பிரித்தாள். ஒரு பகுதி நெல்லை அவித்தாள். அவிப்பதற்கு விறகைப் பயன்படுத்தாமல் சப்பை நெல்லைப் பயன்படுத்தினாள். அதேவேளையில், மிகுதி நெல்லை வெயிலில் காய வைத்தாள். ஒருபகுதி நெல்லை உரலில் இட்டு உடைத்துத் துப்பரவு செய்து மாவாக்கினாள். அவித்த நெல்லைக் உலர வைத்தாள். இருந்ததில் ஒரு பகுதியை மீண்டும் அவிக்கப் போட்டாள். காய்ந்து

கொண்டிருந்த நெல்லை உடைத்துப் பச்சரிசி ஆக்கினாள்.

உலர விட்ட நெல்லை உரலில் இட்டுத் துவைத்தாள். துவைத்ததை மறுபடியும் காய வைத்து அவலாக்கினாள். திரும்பவும் அவிக்கப்பட்ட நெல்லைக் காய வைத்தாள். காய்ந்ததும் அதைக் குற்றிக் குத்தரிசியாக்கினாள். வெற்று மூட்டையை மடித்து வைத்தாள். குத்தரிசி, பச்சரிசி, அவல், மா என்று நான்கு வகையாகியது. குத்தரிசியில் சோறு ஆக்கினாள். பச்சரிசி பொங்கலாகியது. அவல், மாவால் பலகாரங்கள் செய்தாள். இரவு வரும் வேளையில் இவ்வளவும் செய்து முடித்திருந்தாள்.

மற்றவர்கள் அரையும் குறையுமாகத் தங்கள் உடைகளையும் அழுக்காக்கி இடத்தையும் அழுக்காக்கி இருந்தனர். ஆனால் மாலதியோ கொடுத்த விறகை உபயோகிக்காமலே, சப்பை நெல்லை விறகாக்கியே செய்த உணவுப் பதார்த்தங்கள், அவளுடைய சிக்கனத் தன்மையைக் காட்டின. மாலதியைத் தினகரனுக்கு மிகவும் பிடித்துப் போய் விட்டது. அவளையே தன் வீட்டையும் பிள்ளைகளையும்

*ஒப்பவைத்தார். அவளைத் தான் பெற்ற முதற்பிள்ளையாகவே போற்றினார். மாலதியும் தினகரனுக்கு விசுவாசமான மகளாகவே வாழ்ந்தாள்.*

## இராமாயணங்கள்

இராமாயணத்தைப் பலர் எழுதி இருக்கிறார்கள். வால்மீகி இராமாயணம், கம்பராமாயணம், அற்புத இராமாயணம், அத்யாத்ய இராமாயணம், ஆனந்த இராமாயணம், வசிட்ட இராமாயணம், சேஷ இராமாயணம் என்று வேறுவேறு பேர்களும் உண்டு. இவற்றுள்ளும் வால்மீகி இராமாயணமும், கம்பராமாயணமும் கூடுதல் பிரபல்யமானவை.

பௌத்த, சமண மதங்களிலும் இராமாயணம் உண்டு. அவற்றில் பௌத்த இராமாயணத்தில் இராமரும், இலட்சுமணனும் , சீதையும் சகோதரர்களாகக் கூறியிருக்கிறார்கள். பிரகிருதம், கன்னடம் ஆகிய மொழிகளிலும் இராமாயணம் எழுதப்பட்டது. சமணமே கூடுதலாகப் பேணும் இம்மொழிகளில், தசரதன், ஜனகன்,அனுமன், இராவணன் எல்லோரும் சமண மதத்தினர்.

அனுமன், சுக்கிரீவன் முதலானவர்கள் குரங்குகள் அல்ல. குரங்கை வழிபடுபவர்கள். இராவணனுக்குப் பத்துத் தலை இல்லை. இவ்வாறு இடத்துக்கிடம், தேசத்துக்குத் தேசம் இராமாயணம் வேறு வேறு விதமாகப் பேசப்படுகின்றது.

## வினாவிடைப் போட்டி முடிவுகள்:

**1** இரண்டு உலகப்போரிலும் எந்த நாடுகளுடனும் சேராது நடுநிலை வகித்த நாடு இது!
சுந்தரம், குளவி, சொற்பம், ஸர்ப்பம், பயிர்ப்பு, எல்லாம், ஆந்தை, துணை. (சுவிற்ஸர்லாந்து)

**2** அமெரிக்க ஜனாதிபதியின் வசிப்பிடம் வெள்ளைமாளிகை என்பது எல்லோருக்கும் தெரியும். ஆனால் இந்த ஜனாதிபதி மட்டும் விதிவிலக்காகி விட்டாரே!
ஜோசிடர், பயிர், இராஜ்ஜியம், வாழை, ரிஷி, பங்கம், பட்டம், அன்பு (ஜோர்ஜ் வாஷிங்டன்)

**3** உலகப் புகழ் பெற்ற இந்த மாவீரருக்குப் பூனை என்றாலே பயம்!
நெஞ்சம், காப்பு, போத்துக்கல், பல்லி, பயன், அன்னம். (நெப்போலியன்)

**4** க்ராப் ஃட்ராக்குலா *(Graf Dracula)*வின் இருப்பிடமாகக் கதையில் சொல்லப்பட்ட *(Transylvanien)* எந்த நாட்டில் உள்ளது?
ரீபாய், மேலைநாடு, இனிமை, வியாபாரம். (ரூமேனியா)

5 கிறீஸ்துவ மதத்தின் கொண்டாட்டங்களுள் கிறிஸ்மஸ்தினம் முக்கியம் கொண்டது என்பதை நீங்கள் அறிவீர்கள். ஆனால் அதை விடவும் முக்கியமான கொண்டாட்டம் இது தெரிகிறதா?
ஈதல், சரஸ்வதி, வீரம், கர்ச்சனை. (ஈஸ்ரர்)

| | |
|---|---|
| **1.ஜெயானந்தன் கண்ணன்** | *Berg. gladbach* |
| **2.முகுந்தன் மகேந்திரன்.** | *Berg. gladbach* |
| **3.பிரகாஸ் கந்தவனம்** | *Norwey* |
| **4.ஜெயதீபா இரத்தினசபாபதி** | *Eschelbronn* |
| **5.சிவகாந் சிவராஜா▶▶** | *Duisburg* |
| **6.மஞ்சுளா சிவசம்பு** | *Lohmar* |
| **7.கௌரிசங்கர் சரவணபவான்** | *Solingen* |
| **8.கிரிசாந் மனோரஞ்சிதராஜா** | *Münster* |
| **9.ஜெயமாலா இரத்தினசபாபதி** | *Eschelbronn* |
| **10.ஜெயசாந் மனோரஞ்சிதராஜா** | *Münster* |
| **11.சிவாஸ்கர் சிவராஜா** | *Duisburg* |
| **12.மோகன் இரத்தினசபாபதி** | *Eschelbronn* |

**▶▶ இந்த அடையாளத்துக்கு உரியவர் பரிசைப் பெறுகிறார்.**

# கேள்! அமுதா கேள்!



இரண்டு வயதுக் குழந்தை- நீ
முரண்டு பிடிக்கலாகுமோ?
கண்ட இடம் ஏறினால்
கால் தடக்கி இடறுமே!

அம்மா சொல்லை என்றுமே
நல்லாய்க் கேட்க வேண்டுமே!
பூனை புலிப் பொம்மைகள்
வேண்டுமென்று கேட்காதே!

தம்பி தங்கை பொம்மைகள்
தாராளமாய்த் தருகிறேன்.
சட்டை தைத்துப் போடு!
சண்டை என்றும் வேண்டாம்

நல்ல பிள்ளையாக -நீ
நானிலத்தில் வளரவே
அம்மா சொல்லை என்றுமே
நல்லாய்க் கேட்க வேண்டுமே!

-கௌரிசங்கர்-

✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡

அமெரிக்க ஜெனாதிபதியின் கார் நம்பர் 100என்று தான் இருக்கும்.


✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡

# தெய்வத்தின் அருள்

இராமன் என்னும் வறியவன் ஒருவன் தன் அன்னையுடன் சிறு குடிசையில் வாழ்ந்து வந்தான். தன் மகனை "உழைத்துக் காசு கொண்டு வந்தால் தானே வயிற்றுக்கு உணவு தர முடியும். எங்காவது சென்று உழைப்புக்கு வழி தேடு" என்று கூறினாள். இராமனோ மிகவும் பயந்த சுபாவம் கொண்டவன். யாரைக் கண்டாலும் பயம். யாருடனும் பேசவும் பயம்.

பயம் கொண்டவனாக இருந்தாலும் இராமன் நல்ல பிள்ளையாக வாழ்ந்தான். பொய் பேச மாட்டான். கெட்ட பழக்கங்களும் அவனுக்கு இருக்கவில்லை. எந்நாளும் கோயிலுக்குப் போவது அவன் வழக்கம். கோவிலிலும் தெய்வத்திடம் "எனக்கு இருக்கும் பயத்தைப் போக்கி விடு. எனக்கு ஏதாவது வேலை கிடைக்கச் செய். என் அம்மாவுக்கு நான் சந்தோஷத்தைக் கொடுக்க வேண்டும்." என்று மனமுருகி வேண்டுவான்.

தெய்வத்திற்கு இராமனிடம் இரக்கம் உண்டாயிற்று. அவன் போகும் இடமெல்லாம்



அவனைப் பின் தொடர்ந்தார். தனக்குப் பின்னால் யாரோ தொடர்வதைப் போல இருக்கவே, இராமன் திரும்பிப் பார்த்தான். யாரும் இல்லை. அவனுக்குப் பயம் ஏற்பட்டது. கடவுளே, இது என்ன சோதனை! என்று மனதுக்குள் சொல்லிக் கொண்டான். தெய்வம் அவன் முன் தோன்றியது.

"உனக்கு உதவி செய்யவே வந்தேன். பயத்தைத் தவிர்த்துக் கொள். என்று கூறிக்

கொண்டு, அவனுக்குப் பலவிதமான கதைகள் சொல்லித் தைரியம் ஊட்டிப் பார்த்தது. அவனுக்குத் தைரியமே வரவில்லை. பயந்தவனாகவே இருந்தான். தெய்வம் எப்படி அவன் பயத்தைப் போக்குவது என்பது பற்றி ஒரு முடிவெடுத்துக் கொண்டது.

திடீரென்று அரண்மனையில் களவு போய் விட்டது. காலடித் தடயம் பார்த்துக் கொண்டு வந்த சேவகர்கள் இராமனின் வீடு வரை வந்தார்கள். அதன் பின் காலடியைக் காணவில்லை. அதனால் இராமனைப் பிடித்துப் போய்ச் சிறையில் இருட்டறையில் இரண்டு நாள் அடைத்து விட்டார்கள். பயம் கொண்ட இராமன் அழுது குழறிப் பார்த்தான். ஏதும் பலனில்லை.

தான் இறக்கப்போகிறேன் என்றே மனதுக்குள் நினைத்துக் கொண்டான். இரண்டாம்நாள் சேவகர்கள் வந்தனர். சேவகர்களைக் கண்டதும் தான் இறக்கவில்லை என்பதைப் புரிந்து கொண்டான. தனிமையும் இருட்டும் அவனது பயத்தைப் போகச் செய்து விட்டன. அரண்மனை நகைகளும் வேறொரு இடத்துத் திருடனிடம் இருந்து கைப்பற்றப் பட்டது.

ஒரு நிரபராதியைக் சிறையில் அடைத்து வைத்ததற்காக அரசன் கவலைப் பட்டான். இராமனிடம் மன்னிப்புக் கோரியதோடு, அவனுக்கு பொன்னும் பொருளும் கொடுத்தான். அவற்றை எடுத்துக் கொண்டு தன் குடிசைக்கு வந்தான் இராமன். குடிசை வாசலில் தெய்வம் நின்றது. அவனைப் பார்த்துச் சிரித்துக் கொண்டது. "உன் பயத்தைப் போக்கி விட்டேன் பார்த்தாயா! நீ நன்றாக இருக்க வேண்டும்" என்று கூறி மறைந்து விட்டது.

இராமனும் அரசன் கொடுத்த பொன்னையும் பொருளையும் தன் தாயிடம் கொடுத்தான். அம்மா அவனுக்குச் சிறு தொழிற்சாலை ஒன்றை அமைத்துக் கொடுத்தாள். தொழில் இல்லை என்று கவலைப்படாமல் இராமன் தன் தாயுடன் சேர்ந்து சந்தோஷமாக வாழ்ந்தான்.

✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡

செல்வது சரியான பாதையாக இல்லாதபோது வேகமாக ஓடுவதால் பயன் என்ன?

-ஜேர்மனிப் பழமொழி-

✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡

## போற்றுங்கள்



நேர்மை கொண்டு வாழுங்கள்!
நல்லவர் நட்பை நாடுங்கள்!

உண்மை நெறியில் நில்லுங்கள்!
உயர்ந்த பண்பை வளருங்கள்!

நல்லதை என்றும் செய்யுங்கள்!
நாட்டுக்கென்று வாழுங்கள்!

எளியவர் துன்பம் துடையுங்கள்!
என்றும் இனிதாய்ப் பேசுங்கள்!

மதத்தைச் சாதியை மறவுங்கள்!
மனிதர் நாம்என எண்ணுங்கள்!

சுயநலப்பேயை விரட்டுங்கள்!
சுதந்திர உணர்வைப் போற்றுங்கள்!

-ம.கணேசன்-

## மகாபாரதம்



இவ்வாறு பாண்டவர்களும் கௌரவர்களும் கிருபரிடத்தில் கல்வியையும், துரோணரிடத்தில் படைப் பயிற்சியையும் பெற்று வந்தனர். துரோணரின் மகனான அசுவத்தாமன் என்பவனும் அவர்களுடன் வாழ்ந்து வந்தான். அந்தண குலத்தில் பிறந்த துரோணரிடம் காணப்பட்ட தோள் வலிமையைக் கண்ட வீஷ்மர் அவரையும், அவரது மைத்துனரான கிருபரையும் அரச அந்தஸ்த்துடன் வாழ வைத்தார்.

அரச குமாரர்கள் இருபகுதியினருக்கும் இடையே அடிக்கடி சண்டை மூண்டது. துரியோதனனுக்கும் வீமனும் அடிக்கடி மோதிக் கொண்டார்கள். பாண்டவர்களுக்கும் கௌரவர்களுக்கும் ஏற்படும் சண்டைகள் பெரியவர்களால் கூட தீர்க்கப்பட முடியாமல் இருந்தது. அரச குமாரர்கள் எல்லோரும் கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கினார்கள். இந்த வேளையில், வேடர் குலத்தின் தலைவரின் மகனான ஏகலைவன் என்பவன் துரோணரிடம் வில்வித்தை பயில விரும்பினான்.

அவன் துரோணரிடம் வந்து தன்னையும் மாணவனாக ஏற்றுக் கொண்டு, தனக்கு வில்வித்தை கற்றுத் தரும்படி வேண்டினான்.
துரோணரின் மாணவர்களிடயே அர்ச்சுனன் வில்வித்தையில் சிறந்தவனாக இருந்தான். அரசகுமாரனுக்குச் சமமாக வேடர் குலத்தில் பிறந்தவன் இருப்பதைத்

துரோணர் விரும்பவில்லை. அவன் அருச்சுனனையும் வெல்லக் கூடிய வில்லாளி என்பதைத் துரோணர் அவனைப் பார்த்தவுடனேயே புரிந்து கொண்டார்.

அதனால் ஏகலைவனைப் பார்த்து "நீ திறமையான வில்லாளி. நீ என் மாணவன் தான். நீ நன்றாக வாழ்வாயாக" என்று வாழ்த்தி அனுப்பி விட்டார். ஏகலைவனும் காட்டுக்குச் சென்று துரோணரைப் போலவே, உருவம் செய்து, அந்த உருவத்தையே துரோணராக நினைத்துக் குருவுக்குரிய பணிவுடன் வணங்கி வில்வித்தையைப் பயின்று வந்தான். யாரும் அறியாமலே அருச்சுனனையும் வெல்லும் அளவுக்குச் சிறந்த வில்லாளியாக வளர்ந்து வந்தான்.

(தொடரும்)

✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡

அமெரிக்க ஜனாதிபதிகளிலேயே தனது பதவிக்காலத்தில் பதவியைத் துறந்தவர் நிக்ஸன் ஒருவர்தான்.

✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡

## சார்லி சப்ளின்

சின்ன வயதில் வாழ்ந்த கென்னிஸ்டன் வீதியையும், வீட்டையும் பார்ப்பதற்கு மனம் விரும்பியது. வாடகைக்காரை அனுப்பி விட்டு, கால்நடையாகவே, நடந்தார் சார்லி. அங்கும் இங்கும் பார்த்துக் கொண்டே நடந்து கொண்டிருந்த சார்லிக்கு, சிறு வயதில் தான் பட்ட துன்பங்கள், வறுமை எல்லாமே திரைப்படத்தைப் போலவே மனதில் ஓடிக் கொண்டிருந்தது. கூடவே, செல்வமும் புகழும் மிக்க தற்கால வாழ்க்கையும் நினைவுக்கு வந்து கொண்டிருந்தது.

ஒருசில மாற்றங்களைத் தவிர, பெரிய மாற்றங்கள் எதுவும் அவ்வீதியில் காணப்படவில்லை. சார்லியை, லண்டனில் வாழ்ந்த பிரபல்யமானவர்கள் சந்தித்துப் பேசினார்கள். அவர்களில் பிபல எழுத்தாளரான எச். ஜி.வெல்ஸ் அவர்களைச் சந்தித்ததில் பெருமை கொண்டார். லண்டனில் இருந்து பிரான்ஸ் சென்றபோது அங்கும் தன் புகழ் பெருகியிருப்பதைச் சார்லி உணர்ந்தார். இரு நகரப் பயணத்தையும் முடித்துக் கொண்டு லாஸ் ஏஞ்சலஸ் திரும்பினார்.

ஃபெஸ்ற் நேசஷனல் தியேட்டரினது படங்களை முடித்துக் கொடுத்து விட்டு 1922இல் தனது ஒப்பந்தத்தை முடித்துக் கொண்டார். பின் தனது சொந்த நிறுவனமான யுனைடெட் ஆர்ட்ஸ்ட்ரின் பணிகளில் இறங்கினார். கலைப் பாதையில் தனக்கென, இறவாப் புகழை அடைந்த

சார்லியின் குடும்ப வாழ்க்கை சோகமும் அமைதியற்றதாக வும் இருந்தது. கலை உலகில் அவரோடு அறிமுகமான சில பெண்களால் சார்லிக்கு இருந்த கௌரவம், களங்கப் பட்டது.



Charlie mit Pola Negri in Berlin, 1921

இவர்களில் இருவரைப் பற்றிச் சார்லி தன் சுயசரிதையில் குறிப்பிடுகின்றார். அவர்களில் ஜேர்மனி நடிகை முக்கியயமானவர். போலா நெக்ரி என்ற இந்த நடிகை 1922இல் பரமவுண்ட் பிலிம் நிறுவனத்தில் நடிப்பதற்காக வந்தாள். அடிக்கடி நடைபெறும் விருந்துகளில் அவள் கலந்து கொள்ளாமல் விட்டதில்லை. சார்லியின் இருப்பிடத்திற்கு அருகிலேயே தான் அமர்ந்து விடுவாள்.

(தொடரும்)

# என் கடிதம்



அருமை மிக்க நண்பனுக்குக்
கடிதம் எழுதவே
ஆசையாக வெள்ளைத் தாளை
எடுத்துக் கொள்ளுவேன்

"அன்பு மிக்க சோமுவுக்கு,
என்று தொடங்குவேன்.
அச்சடித்த எழுத்தைப் போல
அழகாய் எழுதுவேன்.

"வணக்கம்" என்றே அடுத்த வரியில்

தனியாய் எழுதுவேன்.
வரிசை யாகத் தகவல் யாவும்
புரியக் கூறுவேன்.

ஆசையாகக் கடிதம் தன்னை
எழுதி முடித்ததும்
"அன்பு நண்பன், என்றே எழுதி
அதற்கும் அடியிலே,

"கண்ணன்" என்றே கையெழுத்தைப்
போட்டு நானுமே,
கடிதம் அதனை உறைக்குள் வைத்துக்
கருத்தாய் ஒட்டுவேன்.

குண்டு குண்டாய் நண்பனுடைய
விலாசம் எழுதுவேன்.
குறையில்லாமல் அஞ்சல் தலையை
உறைமேல் ஒட்டுவேன்.

அஞ்சல் பெட்டி வாய்க்குள் போட்டு
வீடு திரும்புவேன்.
அருமை நண்பன் பதிலைக் காண
ஆவல் கொள்ளுவேன்

– அழ.வள்ளியப்பா –




**NEKTAR FÜR KINDER**